17 AUG 1999


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 32 செவ்வாய்க்கிழமை [17-08-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 226


# புல்மோட்டைக் கடலில்

# அதிகாலை கடுஞ் சமர்!

## டோறாவை மூழ்கடித்ததாக விடுதலைப்புலிகள் அறிவிப்பு

திருகோணமலை, ஒகஸ்ட் 17

திருமலைக்கு வடமேற்கே புல்மோட்டைக் கடற்பகுதியில் நேற்று அதிகாலை 3 மணிமுதல் — சுமார் மூன்று மணி நேரம் —கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையே கடுஞ்சண்டை நடைபெற்றது.

இச் சமரின்போது தாங்கள் நடத்திய கடற்கரும்புலித் தாக்குதலில் கடற்படையினரின் டோறா பீரங்கிப் படகு ஒன்று மூழ்கடிக்கப் பட்டதாகவும் மற்றும் இருபடகுகள் சேதமாக்கப்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

புல்மோட்டைக் கடலில் ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின் படகுகள் மீதே இத்தாக்குதல் நடத்தப் பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். மூழ்கடிக்கப்பட்டடோறாபடகில் இருந்த 10க்கும் மேற்பட்ட கடற்படையினர் கொல்லப் பட்டதாகவும்—

கடற்கரும்புலிகளான லெப்டினன்ட் கேணல் நேரியப்பன் (வீரவாகு சிவனேஸ்வரன் — மூதூர்), மேஜர் எழில்வேந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### படை முகாம்கள் மூடப்பட்டதால்

## மட்டு- பொலன்னறுவை எல்லைப்புற கிராமவாசிகள் வெளியேறுகின்றனர்

மட்டக்களப்பு, ஒக.17

மட்டக்களப்பு — பொலன்னறுவை மாவட்ட எல்லைப் பகுதிகளில் உள்ள சிங்களக் கிராமவாசிகள் பாதுகாப்புக் கருதித் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலன்னறுவை மாவட்டத்தின் கிழக்கு எல்லையில் உள்ள மகாவலி 'பி' வலயத்தில் அமைந்திருந்த இரண்டு இராணுவ முகாம்களும் குடாப்பொத்தனை என்ற இடத்தில் அமைந்திருந்த பொலீஸ்காவல் நிலையமும் திடீரென மூடப்பட்டு அங்கிருந்த படையினரும் பொலீஸாரும் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்தே பீதியடைந்த கிராம வாசிகள் இடம்பெயர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவமுகாம்கள் மூடப்பட்டதால் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை—

இராணுவ பொலீஸ் பாதுகாப்பு வசதிகள் உடனடியாகத் தமக்கு செய்துதரப்படல் வேண்டும் எனக் கோரி மேற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் அரசு பேச்சு நடத்த வெளிநாட்டு மத்தியஸ்தம் அவசியம்

### அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 17

அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அரசு விடுதலைப் புலிகளுடன் வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேசாது நாட்டில் அமைதியை ஒரு போதும் ஏற்படுத்திவிட முடியாது.

நாடாளுமன்ற விவகார திட்ட அமுலாக்கல் அமைச்சர்ஜெயராஜ்பெர்னாண்டோ புள்ளே கொழும்பில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;-

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பெரும் அவநம்பிக்கைகள் இருப்பதை உலகமே அறியும். இதனால் ஐ. நா. போன்ற வெளிநாட்டு அமைப்புக்கள் இரு தரப்பினருக்குமிடையில் மூன்றாம்தரப்பு மத்தியஸ்தராக பங்குபற்றி முக்கிய பணியை ஆற்ற முடியும்.

இந்த இருதரப்புக்கும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர்க் கந்தன் மகோற்சவம் நேற்று பக்திபூர்வமாக ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக. 17

நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் நேற்றுக்காலை 10.00 மணிக்கு பக்திபூர்வமாக கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நேற்றைய உற்சவத்துக்கு வருகை தந்திருந்தனர்.

ஆலயச் சூழலில் பல்வேறு

[10 ஆம் பக்கம் பார்க்க]

## காணாமற்போன மாணவர்கள் ஈ.பி.டி.பி. முகாமில்

யாழ்ப்பாணம், ஒக. 17

ஆனைக்கோட்டை மற்றும் மானிப்பாய் பகுதிகளில் இருந்து கடந்த வெள்ளியன்று காணாமற்போனதாக முறையிடப்பட்ட மூன்று மாணவர்களும் தற்சமயம் ஈ. பி. டி. பி. முகாமில் இருப்பதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.

அவர்கள் மூவரும் வீட்டில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதலில் சிக்கி மீனவர் பலி; இருவர் காயம்

வவுனியா, ஒக. 17

புல்மோட்டை கடற்பகுதியில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையே நேற்று அதிகாலை சண்டை இடம்பெற்ற சமயம் ஷெல் தாக்குதலில் சிக்கி மீனவர் ஒருவர் பலியானார். இருவர் காயமடைந்தனர். மேலும் இரண்டு பேர் காணாமற் போயுள்ளதாக அஞ்சப்படுகிறது.

புத்தளம் பகுதியில் இருந்து வெளியேறி புல்மோட்டைப் பகுதியில் தங்கியிருந்து தொழிலில் ஈடுபடும் மீனவர்களே ஷெல் தாக்குதலில் சிக்கியுள்ளனர். கடற் சண்டை இடம்பெற்ற சமயம் அப்பகுதியில் சுமார் 200 வள்ளங்களில் மீனவர்கள் தொழி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று 2 மின்மாற்றிகள் தகர்ப்பு

வவுனியா, ஒக. 17

வவுனியாவில் நேற்று அதிகாலை இரண்டு மின்மாற்றிகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டிருக்கின்றன.

தாண்டிக்குளம் தொழில் பேட்டைக்கு முன்பாக உள்ள மின்மாற்றி அதிகாலை 3.50 மணியளவில் வெடித்துச் சிதறியது. தொடர்ந்து பெரியார் குளம் என்னும் இடத்தில் அமைந்திருந்த மற்றொரு மின்மாற்றியும் குண்டினால் தகர்ந்தது.

இந்த இரு மின்மாற்றிகளும் தகர்க்கப்பட்டதால் பெரும் பிரதேசத்துக்கான மின் விநியோகம் நேற்று துண்டிக்கப் பட்டிருந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு - பொலன்னறுவை இடையே

## வீதிக் கண்காணிப்புப் பணியில் நேற்றுமுதல் இராணுவத்தினர்

மட்டக்களப்பு, ஒக. 17

மட்டக்களப்புக்கும் பொலன்னறுவைக்கும் இடையே இராணுவ வாகனத்தொடர் அணி செல்லும் பாதையில் நேற்று முதல் இராணுவத்தினரும் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதுவரைகாலமும் பொலீஸார் மட்டுமே வீதிக் கண்கா

[10ஆம் பக்கம் பார்க்க]

### புலிகள் பகுதியில் இருந்து

## மாங்குளம் ஊடாக மக்கள் நேற்றும் வவுனியா வரவில்லை

வவுனியா, ஒக 17

மாங்குளம் ஊடாகப் போக்குவரத்துப்பாதை திறக்கப்பட்டு ஒருவாரம் கடந்த நிலையில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து பொதுமக்கள் நேற்று வவுனியாவுக்கு வரவில்லை.

பயணிகள் வவுனியா செல்ல நேற்றுமுதல் புலிகள் அனுமதி வழங்க இருந்ததாகத் தகவல்கள் வெளியாகி இருந்த போதிலும் நேற்றும் அப்பாதை ஊடாகப் பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைதான ஐந்து பெண்களும் காங்கேசன் தடுப்பு முகாமில்

யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ். நகர் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வைத்துக் கடந்த 9 ஆம் திகதி திங்கட்கிழமை படையினரால் கைது செய்யப்பட்ட ஐந்து பெண்கள் நேற்று காங்கேசன் துறை தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி, அளவெட்டி, ஆனைக்கோட்டை மற்றும் நல்லூர் பகுதிகளைச் சேர்ந்த பெண்களே கைது செய்

(10ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் காடு வளர்ப்புத்திட்டம்; காணி கிடைக்காததால் தாமதம்

யாழ்ப்பாணம், ஒக. 17

அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் யாழ். மாவட்டத்தில் காடு வளர்ப்புத் திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்ட போதும் இதற்கான காணி எதுவும் கிடைக்காமையினால் கடந்த ஒரு வருடகாலமாக இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்திற்கென தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கடந்த வருடம் காணி ஒன்று சிபார்சு செய்யப்பட்டது.

இது தொடர்பான ஆரம்ப வேலைகளைத் தொடரும் பொருட்டு மேற்படி காணியைப் பொறுப்பேற்க முனைந்த பொழுது அதன் உரிமையாளர்கள் தலையிட்டதால் பின்னர் அக்காணியில் காடு வளர்ப்புத் திட்டத்தை செயற்படுத்த முடியாமல் போய் விட்டதாக அரச மரக் கூட்டுத்தாபன வடபிரதேச முகாமையாளர் க. விஜயரத்தினம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் எப்பகுதியிலேனும் 50 ஏக்கரில் காடு வளர்ப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரச மரக் கூட்டுத்தாபனம் தயாராக இருக்கிறது என்றும்—

பிரதேச செயலர்கள் ஏதாவது தமது பிரதேசத்தில் அதற்குரிய காணியை வழங்கினால் அப் பிரதேசத்தில் காடு வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம் என்றும்—

அவர் மேலும் கூறினார்.

(ஐ-5-ரி)

# விடைத்தாள் திருத்தும் ஆசிரியர் நாளை பயணம்

யாழ்ப்பாணம், ஒக. 17

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் மதிப்பீட்டாளர்களில் ஒரு பகுதியினர் கொழும்புக்கு செல்வதற்கான ஏற்பாடுகள் யாழ். கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு செல்லும் மதிப்பீட்டாளர்களின் முதற் தொகுதியினரை நாளை புதன்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு பிரயாண ஒழுங்குகளுடன் வருகை தருமாறும்—

கொழும்பு செல்ல வேண்டிய மதிப்பீட்டாளர்களில் இரண்டாவது தொகுதியினரின் பெயர்ப்பட்டியல் வேம்படி மகளிர் கல்லூரியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்றும்—

மதிப்பீட்டாளர்கள் இப்பட்டியலைப் பார்வையிட்டு தமது பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும்—

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஐ-6-7)

## சாரணரை ஒன்றுகூட அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 17

குருளைச் சாரணர் தலைவர் பிரிவு சாரணர் தலைவர் பிரிவு, உயர்தரு சின்னப் பயிற்சி ஆகிய பயிற்சிகளுக்குக் கிளிநொச்சி மாவட்டம் ஊடாக விண்ணப்பித்தவர்களை நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி கல்வி வலய விரிவுரை மண்டபத்தில் ஒன்று கூடுமாறு கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் மா. புவனேந்திரன் கேட்டுள்ளார்.

(ஐ-7)

## தடுப்பு முகாமுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், ஒக. 17

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். ஸ்ரீதரன் நாளை புதன்கிழமை காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை இவர் நேரில் சென்று பார்வையிடுவதுடன் உறவினர்களால் வழங்கப்பட்ட கடிதங்களையும் அவர்களிடம் கையளிப்பார்.

(ஐ-9)

## மானிப்பாயில் பொலிஸ் நிலையம்

யாழ்ப்பாணம், ஒக. 17

மானிப்பாயில் கடந்தவாரம் பொலீஸ் நிலையம் ஒன்று புதிதாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்து வந்த இப்பகுதி மக்கள் தற்பொழுது மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் தமது முறைப்பாடுகளைச் செய்து வருகின்றனர்.


உ
அம்பாள் துணை
''ஓம் ஸ்ரீ விராட் விஸ்வ பிரம்மனே நமஹ''

**சித்தி விநாயகர் சோதிட நிலையம்**

சாதகம் எழுத, பலாபலனறிய, விவாகப் பொருத்தம் பார்க்க, பிரயாணத் தடை, விவாகத் தாமதம் இவைக்குப் பரிகாரம் காண கிரக தோஷயந்திரம் வீடு, வியாபார ஸ்தலங்களுக்கு இலட்சுமி வசிய யந்திரம் மற்றும் சகல விதமான யந்திரங்களுக்கும் நேரில் சந்தியுங்கள்.

சோதிடர் விஸ்வ பிரம்மஸ்ரீ
**மா. தங்கவேல்**
டச்சு வீதி,
சாவகச்சேரி.
(வேன்ட் லிங் கொமினிகேசன் முன்பாக)
(68244)



**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
நாளை மட்டும்
சத்தியராஜ் - குஷ்பு
நடித்த
**மலபார் பொலீஸ்**
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
(68097)



**ராஜா**
யாழ்ப்பாணம்
பிரசாந்த் — ஐஸ்வர்யா
நாசர் நடித்த
**ஜீன்ஸ்**
10-30, 2-30
(புதிய நேரம்)
(சி/8475)



**நாகம்ஸ்**
சுன்னாகம்
கார்த்திக், நக்மா,
கவுண்டமணி நடித்த
**மேட்டுக்குடி**
காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
[68220]



# WANTED

Graduates to teach the following subjects in the Advanced Level Classes.

1. Physics
2. Combined Mathematics
3. Hindu Civilization

Applications should be forwarded to reach the Principal before the 25th August '99.

Principal,
Chundikuli Girls' College,
Jaffna,

(C/8535)



உ
கொக்குவில் மேற்கு

**மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1999**

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் | — | 17-08-99 | செவ்வாய்க்கிழமை நண்பகல் | 12 மணி |
| தண்டாயுதபாணி உற்சவம் | — | 23-08-99 | திங்கட்கிழமை பிற்பகல் | 2 மணி |
| சப்பறத் திருவிழா | — | 24-08-99 | செவ்வாய்க்கிழமை மாலை | 6 மணி |
| தேர்த்திருவிழா | — | 25-08-99 | புதன்கிழமை காலை | 9 மணி |
| தீர்த்தம் | — | 26-08-99 | வியாழக்கிழமை காலை | 9 மணி |
| பூங்காவனம் | — | 27 08-99 | வெள்ளிக்கிழமை பிற்பகல் | 4 மணி |
| அலங்காரத் திருவிழா | — | 28-08-99 | சனிக்கிழமை பிற்பகல் | 4 மணி |
| தேரடிப் பொங்கல் | — | 29-08-99 | ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் | 4 மணி |

பகல் திருவிழா நண்பகல் 12 மணிக்கும் இரவுத் திருவிழா மாலை 6.30 மணிக்கும் நிறைவுபெறும். அடியார்கள் எம்பெருமானைத் தரிசித்து சகல சித்திகளும் பெற்றுய்வீர்களாக.

— ஆலயத் தொண்டில் நிர்வாக சபையினர்,

விளம்பர அன்பளிப்பு: **திரு. சு. விக்னேஸ்வரன் (விக்னா)**
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(சி/8538)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை உமாமகேஸ்வரன்

(இளைப்பாறிய அதிபர்)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை உமாமகேஸ்வரன் அவர்கள் 16-8-99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கௌரிப்பிள்ளையின் அன்புக் கணவரும் திருமதி சௌந்தரவல்லி தர்மலிங்கம் (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி), நிர்மலானந்தன் (கொழும்பு), திருமதி கோமளவல்லி தேவதாசன் (ஆசிரியை, யூனியன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஏ. தர்மலிங்கம் (இளைப்பாறிய உத்தியோகத்தர் புகையிரதப் பகுதி), திருமதி வாசுகி நிர்மலானந்தன் (ஓமான்), வே. தேவதாசன் (வ. பி. போ. சபை, கோண்டாவில் டிப்போ) ஆகியோரின் அன்பு மாமனாரும் த. மாதங்கி (A/L மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நி. கங்காதரன், வே. கௌரிசங்கர் ஆகியோரின் பாசமிகு பேரனும் சு. முருகேசு (இளைப்பாறிய ஆசிரியர்), சு. நடராசா (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-8-99) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஏ. தர்மலிங்கம்
(மருமகன்)

சங்கத்தானை,
சாவகச்சேரி.

[சி/8539]


உ
**புதுக்கடைத் திறப்பு விழா**

வாடிக்கையாளர்களின் நன்மை கருதி தமது சேவையினை
மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள

**நகுலா நகைமாடம்**
**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
**ஸ்தாபனத்தாரின்**

இணை நிறுவனமானது நாளை (18-08-99) புதன்கிழமை
இல. 74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரியில் மிகவும் கோலாகலமாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதனை தமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றார்கள்.

**நகுலா நகைமாடம்**
241 G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(68246)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பக்குவம் வேண்டும்

போரினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டு விட்டோம். இனியும் இந்தப் பாதிப்பைத் தாங்க முடியாது. உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்கச் சகலரும் முன்வாருங்கள்.

இலங்கை ஆயர் மன்றச் செயலாளரும் இரத்தினபுரி ஆயருமான அதி வண. மல்கம் ரஞ்சித், அரசியல் தலைவர்களுக்கு இவ்வாறு அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஆயர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர் என்பதால் அப்பகுதி மக்களில் கணிசமானோரின் கருத்தும் இதுவாகவே இருக்கும் என்று கொள்ளலாம்.

தமிழ் மக்களின் கருத்தும் இதுவென்றால் மிகையில்லை. இதற்கு மேலும் பாதிப்பு என்றால் அது சாவாகவே இருக்கும் என்ற நிலையே இப்போது அவர்களின் வாழ்க்கையில் அமைந்து வருகிறது. பத்து, பதினைந்து, இருபது என்று எண்ணிக் கொண்டே போகுமளவுக்கு அவர்களின் அவல வாழ்வு வருடங்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளது.

உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற முடியாததால் அவர்களின் அன்றாட — நிகழ்கால—வாழ்க்கை மட்டும் பாதிக்கப்படவில்லை. கல்வி, தொழில் வசதி, மனக்குழப்பம் போன்ற பாதிப்புகளால் அவர்களின் எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது. இனிவரப்போகும் காலத்தில் நிலைமை மேலும் மோசமடைந்து வாழ்க்கை சூனியமாகி விடும் ஆபத்தும் உண்டு.

ஆகையால் நாட்டின் இரு சாராரையும் பாதிக்கும் போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய அவசர அவசியம் தோன்றியுள்ளது. ஆனால் தமது உரிமைகளுக்காக இத்தனை காலமும் தமது வாழ்க்கையையே இழந்தவர்கள் தாமாக அதற்கான போராட்டத்தை நிறுத்துவது என்பது முன்வைத்த காலை பின் வைப்பதாகும். அதுவே சரணாகதியும் ஆகிவிடும். ஆகையால் அது எள்ளளவும் சாத்தியமற்றது.

மக்கள் போரினால் பாதிப்புறாமல் தடுப்பதற்கு, பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அதற்கான முனைப்பான செயற்பாடுகள் அரச தரப்பில் இருந்தே தோன்ற வேண்டும். ஆனால் அரசாங்கம் அதனை இதயசுத்தியுடன் ஆற்றவில்லை. போர் சமாதானத்துக்கான பாதை என்று நம்புவது ஒரு புறமாகவும், பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பது என்பது இன்னொரு புறமாகவும் இரட்டை வேடம் காட்டுகிறது.

மேலும் இலங்கை ஓர் இனத்துக்கும் ஒரு மதத்துக்கும் சொந்தமானது என்ற தவறான கருத்தே இனப்பிரச்சினை தீராமல் இத்தனை காலமாக நீண்டு கொண்டு போவதற்குப் பிரதான காரணம் ஆகும். இந்த நாட்டில் வாழும் எல்லோரும் சம உரிமை உள்ள பிரஜைகள் என்ற உணர்வு சிங்களத் தலைவர்களுக்குப் பிறந்திருந்தால், அந்த உணர்வு அவர்களிடம் வளர்ந்திருந்தால், இன்றைய சீரழிவு வந்திருக்காது.

ஆனால் கவலைக்கும் வேதனைக்கும் உரியது என்னவென்றால், எல்லா மக்களும் — சகல பிரஜைகளும் — சம உரிமை உடையவர்கள்; தமிழர்களுக்கும் இறைமை, சுயநிர்ணய உரிமை உண்டு. என்ற கோட்பாட்டை ஒப்புக் கொள்ளவும், ஏற்றுக் கொள்ளவும் சிங்களத் தலைவர்கள் இன்னமும் பக்குவப்பட்டதாக இல்லை.

இது போன்ற விடயங்களைப் போரினால் நசுக்கி விடலாம் என்று நினைப்பது காரிய சாத்தியமாகாது. உண்மைகளைச் சீரணித்துக் கொண்டு, புரிந்துணர்வுடன் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க மனங் கொள்ள வேண்டும்.

# டாகெஸ்தானில் கடும் சண்டை!

மொஸ்கோ, ஓக, ஓக. 17

டாகெஸ்தான் குடியரசில் டாகெஸ்தான் கிளர்ச்சிக்காரர்களுக்கும் ரஷ்யப்படைகளுக்கும் இடையே கடும்சண்டை நடைபெற்றுவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ரஷ்யப் படைகள் பீரங்கிகள் மற்றும் விமானத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இதேவேளை —

சுதந்திரமான முஸ்லிம் ராஜ்யத்தை உருவாக்கும் முயற்சியில் டாகெஸ்தானின் தெற்குப் பிராந்தியத்தின் ஒரு பகுதியைக் கைப்பற்றிய பிரிவினைவாதக் கிளர்ச்சியாளர்களுக்கு உதவி புரிய வேண்டாம் எனவும்—

டாகெஸ்தான் குடியரசில் பயங்கர வாதத்துக்கான எந்த ஒரு வெளி ஆதரவும் ரஷ்யாவின் உள் விவகாரங்களில் குறுக்கிடும் நடவடிக்கையாகவே கருதப்படும் எனவும்— ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் இகோர் இவனோவ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐ. நா. பொதுச்செயலர் கோபி அனான் தொழில் வளநாடுகள், காமன் வெல்த் சுயேச்சை நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு இவனோவ் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

டாகொம்தான் கிளர்ச்சிக்காரர்களுக்கு வெளிநாட்டு உதவி கிடைக்கின்றது. என்பதற்கு சான்றுகள் உள்ளதாகவும் இவனோவ் தெரிவித்தார். (இ-க)

## ஹொங்கொங்கில் உள்ள சீனப் படைகள் உஷார்

பெய்ஜிங், ஓக.17

சீனாவுக்கும் - தாய்வானுக்கும் இடையே பதற்ற நிலை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து ஹொங்கொங்கில் உள்ள சீன இராணுவத்தினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஹெலிக்கொப்டர்கள்வந்திறங்கக் கூடிய போர்க் கப்பல்களும் மற்றும் ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ள கப்பல்களும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளன.

சீன இறையாண்மையின் கீழ் ஹொங்கொங்குக்கு பெருமளவு சுய நிர்ணய உரிமைகள் வழங்கப்பட்ட போதிலும் பாதுகாப்பு, வெளியுறவு தொடர்பான விவரங்கள் போன்றவற்றை சீன மத்திய அரசே மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (இ-க)

## அமெ. - தென் கொரியா கூட்டு இராணுவப் பயிற்சி

சியோல், ஓக. 17

அமெரிக்காவும் தென் கொரியாவும் இணைந்து இராணுவப் பயிற்சி ஒன்றை ஆரம்பித்துள்ளன.

இந்தப் பயிற்சி தொடர்ந்து 12 நாள்கள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடகொரியா புதிய தொலை தூர ஏவுகணையை பரிசோதிக்க உள்ளதாக வந்த தகவல்களை அடுத்தே இந்த இராணுவப் பயிற்சி நடைபெறுவதாகத் தெரிய வருகின்றது.

இந்தப் பயிற்சியை அடுத்து அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுடனான உறவுகள் பாதிக்கப்படக் கூடும் என வட கொரியா எச்சரித்துள்ளது. (இ-க)

## மண்டேலாவை கௌரவிக்க உருவாக்கப்பட்ட காடு

ஜோகன்னஸ்பேர்க், ஓக. 17

நெல்சன் மண்டேலாவை கௌரவிக்கும் வகையில் ஒரு புதிய காடு உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் 2500 புதிய மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. மண்டேலாவின் பண்ணையில் இந்தக் காடு உள்ளது. நெட்கார் வங்கி இந்த வனத் திட்டத்தை செயல்படுத்துகிறது.

மண்டேலாவின் 80 ஆவது பிறந்த தினம் சமீபத்தில் கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு இந்தக் காடு உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

''நான் கிராமப்புறத்தில் வளர்ந்தவன், இயற்கையை நேசிப்பவன். இந்தக் காடு எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது'' என்று மண்டேலா கூறினார்.

இதேபோல இனவெறி ஆட்சிக்கு எதிராகப் போராடிய மற்றத் தலைவர்களின் பெயர்களிலும் மரங்கள் நடப்படும் என்று நீர்வளத் துறை அமைச்சர் ரோனி கஸ்ரில்ஸ் கூறினார். (இ-8)

## முஜிபுர் கொலைக் குற்றவாளிகள்

## தலைமறைவானோரைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி

டாக்கா, ஓக.17

பங்களாதேஷ் முன்னாள் தலைவர் முஜிபுர் ரஹ்மான் கொலை வழக்கில் தண்டனை வழங்கப்பட்டு — தலைமறைவாக இருக்கும் குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடிக்க உள்துறை அமைச்சர் பகவத் நஷீம் தலைமையில் குழு ஒன்றை பங்களாதேஷ் அரசு அமைத்துள்ளது.

இந்தக் குழு 'இன்டர்போல்' மற்றும் பல்வேறு உளவு அமைப்புக்களுடன் இது விடயமாக கலந்தாலோசனைகளை நடத்திவருகின்றது.

முஜிபுர் ரஹ்மான் கொலை வழக்கில் 15 பேருக்கு டாக்கா நீதிமன்றம் சென்ற ஆண்டு மரண தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது தெரிந்ததே.

ஆனால்— இந்த 15 பேரில் 4 பேர் மட்டுமே டாக்கா மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஏனையபதினொரு பேரும் தலைமறைவாகியுள்ளனர்,

இந்தப் பதினொரு பேரும் அமெரிக்கா, கனடா மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகளில் ஒளிந்து வாழ்ந்துகொண்டிருப்பதாக பங்களாதேஷ் அரசு தெரிவிக்கின்றது. (இ-க)

## பிராந்தியபாதுகாப்பு கருதி

## சீனா, இந்தியா, ரஷ்யா முக்கோண உறவு யோசனை

சீனா, இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையில் முக்கோண உறவு ஏற்பட சீனா விரும்புகிறது. இதன் மூலம் பிராந்திய பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடைக்கும் என்று அது நம்புகிறது.

முக்கோண உறவு குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் கே. ரகுநாத் முன்னாள் பிரதமர் ஐ கே. குஜ்ரால் ஆகியோருடன் சீன அதிகாரிகள் விவாதித்துள்ளனர்.

ரஷ்ய முன்னாள் பிரதமர் பிரிமகோவ் கடந்த ஆண்டு டில்லிக்கு வந்திருந்தார். முக்கோண உறவு குறித்து அப்போதே யோசனை கூறினார்.

உலக நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி யூகோஸ்லாவியா மீது நேட்டோ தாக்குதல் நடத்தியது அப்போது சீன தூதரகம் மீதும் குண்டு விழுந்தது. இதிலிருந்தே சீனா தனது வெளிநாட்டுக்கொள்கையை மறுபரிசீலனை செய்யத் தொடங்கிவிட்டது.

இந்தியா கடந்த ஆண்டு அணுகுண்டுச் சோதனை நடத்தியதிலிருந்து சீனா— இந்தியா உறவில் சற்றே பின்னடைவு ஏற்பட்டிருந்தது. ஜூன் மாதம் மத்தியில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த்சிங் சீனாசென்றார். இதையடுத்து உறவு பேம்பட்டது. தற்பொழுது ரஷ்யாவையும் இணைத்து முக்கோண உறவு யோசனை ஒன்றை சீனா முன்வைத்துள்ளது

## 29 பேர் படுகொலை

அல்ஜீரியாவின் பேர்ஷார் பகுதியில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படுவோர் 29 பொது மக்களைக் கொன்றுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகின்றது

வீதியில் இவர்கள் நிறுத்தப்பட்டு கொல்லப்பட்டனர். 23 பேரின் கழுத்து அறுக்கப்பட்டது. 6 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

ஏப்ரல் 15 ஆம் திகதி அதிபர் அப்துல் அஷீர் பொட்லிகா தேர்ந்தெடுக்கப்பட்டபின் நிகழ்ந்துள்ள படுமோசமான கொலை இதுவாகும்.

## பிரகடனம்

செச்சின்யாவில் ஒரு மாத காலத்துக்கு நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்யப் படைகள் செச்சின்யாவை எந்த நேரமும் தாக்கலாம் என்ற அச்சத்தின் பேரிலேயேநெருக்கடிநிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

டாகெஸ்ரான் கிளர்ச்சிக்காரர்கள் செச்சின்யாவில் தமது தளங்களை அமைத்துள்ளனர்என்றும்—கிளர்ச்சிக்காரர்களின் தளங்களைத் தாம் தாக்கப் போவதாகவும் ரஷ்யா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-க)

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## இன்னருளே நல்லூரரா!

இரத்தினவடிவேலவனே! இன்னருளே, நல்லூரரா!
கரத்திலுறை வேல் ஒளியில் காரிருள் மலமகலும்
சிரத்தினிலுன் அடிபோற்றிச் சீலமுயர் வாழ்வு பெற
சுரத்தினிலே கானம் வரும் சுந்தர மயூரனுக்கே!

— தேவி கணேஸ்

## அருள்தராதது ஏனோ?

கடலெனப் பெருகுமுன் கருணையுள் ளமுந்தான்
காய்ந்ததோ? மெய்யடி யார்க்குத்
திடங்கொள அருளும் வரங்களு மீந்தே
தீர்ந்துதான் முடிந் தனவோ?
உடலுள மெம்மிலுங் கூட நொந்தார்க்கு
உதவவே எமைமறந் தனையோ?
அடல் கொளும் வீர நல்லையூர் கந்தா!
அருள்தரா திருந்ததென் புகலே.

—அராலி பரமேஸ்வர சர்மா

## நாளை

ஆவணி 1

புதன்கிழமை

திதி: ஸப்தமி

முன் இரவு 7-37 வரை

நட்சத்திரம்: சுவாதி

முற்பகல் 9.43 வரை

சுபநேரம்: 4 35 -6 05

ராகுகாலம்: 12 05 01 35

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)



## தேரடியில் தேசிகனைக் காண்!

''வண்டுபண் செய்யும் வளம் பெருகு நல்லூரில்
மிண்டு மனத்தவரை மேனிலைக்குக் — கொண்டுவரும்
தேரடியில் தேசிகனைக் கண்டு தெரிசித்தேன்
தீரடா பற்றென்றான் சிரித்து''

— யோகர் சுவாமிகள்

### உதயவாக்கு

பெரியோர் உன்னைச் 'சீ' என்று வெறுத்துக் கூறாத படி நல்ல வழியில் நட.

— ஔவையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

சிறந்த பௌதிகவியல் தூய, பிரயோக கணிதப் புத்தகங்கள், தமிழ் ஆங்கிலம் Cookery Books உடன் விற்பனைக்கு உண்டு. R. பால சுப்பிரமணியம் (B. Sc. Cey) 7/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

[68239]

**சந்தைப்படுத்தல்**

B. A., B. Com. மாணவர்களுக்கான சந்தைப்படுத்தல் முகாமை எனும் நூல் வெளிவந்துவிட்டது. இ. இரட்ணம் சிரேஷ்ட விரிவுரையாளர், பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

(68191)

**இறைச்சிக்கோழி**

இறைச்சிக்கோழி (புறோயிலர்) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: கண்ணா வீடியோ சென்ரர் வளவு, மான் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம்.

(68155)

**கடை விற்பனைக்கு**

K. K. S. வீதியில் கதிரேசன் கோயிலுக்கு முன்பாக சகல வசதிகளும் உடைய கடை ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி த. இரத்தினசிங்கம், 77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். நேரம் மாலை 3 மணிக்குப் பின்பு.

[68236]

**பிறிமா குஞ்சுகள்**

பிறிமா Hi - line சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் வந்துவிட்டன. தேவையானவர்கள் உடன் பெற்றுக் கொள்ளவும். 4 தினங்கள் வளர்ச்சியடைந்த Bairaha Farm's புறொயிலர் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு, எல்லாவற்றிற்கும் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. வை' சிவகுமார் நாவலர் வீதி, அத்தியடிச் சந்தி, [அரவிந் வீடியோ அருகில்] யாழ்ப்பாணம்.

[68240]

# யாழ். பல்கலையில் கூட்டுப்பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஒக. 17

வன்னிப் பகுதியில் தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து மக்கள் அமைதியாகவும் சுதந்திரமாகவும் வாழத் தெய்வ ஆசி வேண்டி யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் கடந்த வெள்ளிக்கிழமை கூட்டுப் பிரார்த்தனை நடத்தப்பட்டது.

பிற்பகல் 5 மணி தொடக்கம் 6 மணி வரை நடத்தப்பட்ட இந்தப் பிரார்த்தனையில் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர்களும் கலந்து கொண்டனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவு முகமாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பித்துள்ள துயர்துடைப்பு நிதி சேகரிக்கும் திட்டத்தை யாழ்' வணிகத்துறைத் தலைவர் தேவராஜா பிரார்த்தனையின் போது சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார். அதனைத் தொடர்ந்து மாணவர்களும் தங்களது பங்களிப்புகளைச் செலுத்தினர்.

இந்தப் பிரார்த்தனை வெள்ளிக்கிழமை தோறும் இடம்பெறும்.

(இ-3-9)

## ஆஸ்பத்திரிக்கு நுணுக்குக் காட்டி

சண்டிலிப்பாய், ஒக. 17

சங்கானை அரசினர் வைத்தியசாலையின் ஆய்வு கூடத்திற்கு நுணுக்குக் காட்டி ஒன்றும் மற்றும் ஆய்வு கூட உபகரணங்களும் கடந்த வாரம் யாழ். சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

செயற்கைச் சுவாசம்கொடுக்கும் கருவி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

[இ-135]

## தட்டுப்பாடு

புன்னாலைக்கட்டுவன். ஒக. 17

குடாநாட்டில் சில்லறை நாணயங்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

(இ-133

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு, சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் தெய்வீகக் கலை நிகழ்வுகளில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஸ்ரீ சாரதா சேவாச்சிர சுவாமி சித்ரூபானந்தாவினால் ''மாயையும் விடுதலையும்'' என்ற தலைப்பிலான சொற்பொழிவு இடம்பெறும்.

(ஐ-க)

# குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 17

தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் இரு குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

கமநல சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் விவசாய சம்மேளனம் ஊடாக தெல்லிப்பழையில் மல்லாகம், நீலியம்பனைக் குளமும், உடுவிலில் கந்தரோடை துருப்புக்குளமுமே புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இக்குளங்கள் புனரமைப்பு தொடர்பாக இப்பகுதிகளிலுள்ளவர்களுக்கு பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

[இ-ரீ-5]

# தண்ணீர் தாங்கிக்கு அடிக்கல்

கொடிகாமம் வணிகர் மன்றத்தினரால் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்துக்கு இரண்டு லட்சம் ரூபா செலவில் தண்ணீர் தாங்கி அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் விழா நாளை புதன்கிழமை காலை 7-30 மணிக்கு மன்றத் தலைவர் க. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறும்.

விழாவில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் மு.வ. செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக வித்தியாலய அதிபர் த. கந்தையாவும் கலந்து கொள்வர். (இ-117)


## விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட
பிறந்ததின, திருமண வாழ்த்து மடல்கள்,
அழைப்பிதழ்கள்
விற்பனைக்கு உண்டு.

**லிங்கன் ஸ்ரோர்ஸ்**
168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[சி/8533]



உ

காரைநகர். மணற்காடு

## கும்பநாயகி முத்துமாரி அம்பாள் கோயில்

ஆடிக் குளிர்த்தி சங்காபிஷேகம் சிறப்பாக
நிகழ்வுற்றது தொடர்பாக உபயகாரர் வழங்கும்

## நன்றி நவிலல்

மேற்படி சங்காபிஷேகத்தை பிரதம குருவாக
இருந்து சிறப்பாக நிகழ்த்திய

சிவஸ்ரீ சுவாமிநாத பாலசுந்தரக்குருக்கள்
(நயினாதீவு)

தேவஸ்தானக் குரு சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள்
(காரைநகர்)

சிவஸ்ரீ சிவா சிவமூர்த்திக் குருக்கள்
(கட்டுடை)

சர்வசாதகர் வடகோவை பிரம்மஸ்ரீ வி. ராஜகோபாலசர்மா
(வடகோவை)

மற்றும் சங்காபிஷேகக் கிரியைகளில் கலந்து சிறப்பித்த ஏனைய சிவாச்சாரியார்கள் அபிஷேகத் திரவியங்கள் வஸ்திரதாஷங்கள் தந்து உதவிய யாழ். நகர வர்த்தகர்கள் பல்வேறு உதவிகள் செய்த அடியவர்கள் தொண்டர்கள் கோயில் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றி உரித்தாகுக.

வணக்கம்

வை. கா. தவராசன்
(உபயக்காரர் சார்பில்)

மணற்காடு,
காரைநகர்.

(68251)



ஸ்ரீராம ஜெயம்

பொன்னாலை

## ஸ்ரீவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

1999 பிரமாதி வருட ஆவணி

## மஹோற்சவவிஞ்ஞாபனம்

**உற்சவ விவரங்கள்**

கொடியேற்றம்
இன்று 17-08-99 காலை 11.00 மணி
சப்பறத்திருவிழா
21-08-99 மாலை 4.00 மணி
மஞ்சத்திருவிழா
26-08-99 மாலை 4.00 மணி
தேர்த்திருவிழா
02-09-99 வியாழன் காலை 11.30 மணி
தீர்த்தத்திருவிழா
03-09-99 காலை 10.30 மணிக்கு
திருவடி நிலையில்

மஹோற்சவக் குரு
சிவப்பிரம்மஸ்ரீ
ச. சோமாஸ்கந்தக் குருக்கள்

பரிபாலன சபை.

(68250)



# நல்லைக் குமரன் மலர் - 1999 (7)
# வெளியீட்டு விழா

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டனடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே - (திருக்குறுந்தொகை)

தலைவர்: திரு வே பொ பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்

காலம்: 18 - 08 - 99 புதன்கிழமை முற்பகல் 8 30 மணி

இடம்: நாவலர் கலாசார மண்டபம்

தெய்வீக இசை: — நாதஸ்வர வித்வான் ''கலாவித்வமணி''
(முருகன் துதிப்பாடல்கள்) தாவடியூர் எம். குகதாசன் குழுவினர்
8-30 — 10-30

வரவேற்புரை: — திரு. இ. இரத்தினசிங்கம்
10-40 — 10-50 செயலாளர், சைவசமய விவகாரக்குழு

தலைமையுரை: — திரு. வே. பொ. பாலசிங்கம்
10-50 – 11-00 மாநகர ஆணையாளரும்,
சைவசமய விவகாரக் குழுவின் காப்பாளரும்

சிறப்புரை: — வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரம்
11-00 — 11-15 தலைவர், சைவசமய விவகாரக்குழு

ஆசியுரை: — ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானம்
11-15 — 11-25 நல்லை ஆதீன முதல்வர்

— சிவ சு. து. ஷண்முகநாதன் குருக்கள்
11-25 — 11-35 மாவை ஆதீனம்

மலர் வெளியீடும் வெளியீட்டுரையும்:
— திரு. ந. விஜயசுந்தரம் பி. ஏ. (சிறப்பு)
11-35 — 11-50 கௌரவ பதிப்பாசிரியர்

முதற் பிரதி பெறுவோர்: — தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர்
12-00 — 12-15

ஆய்வுரை: — திரு. கோ. சி. வேலாயுதம்
12-15 — 1-15 முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்

நன்றியுரை: — திரு. து. சோமசுந்தரம்
1-15 பொருளாளர் சைவசமய விவகாரக்குழு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சைவசமய விவகாரக் குழு,
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

(சி/8531)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனக் கல்லூரி தனது சொந்த இடத்தில் இயங்க இராணுவம் அனுமதி

## எனினும் உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய நிலையில் இல்லை

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை சொந்தஇடத்தில் மீண்டும் இயங்குவதற்கு படைத்தரப்புஅனுமதிவழங்கி உள்ளது. எனினும் அந்தக் கல்லூரி உடனடியாக இயங்குவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுவதாக வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் பாடசாலையின் பல கட்டடங்களின் கூரைகள், மரங்கள் கழற்றப்பட்டு உடனடி பாவனைக்கு அந்தப்பாடசாலை பயன்பட முடியாத நிலைமை காணப்படுகிறது.

சில தினங்களுக்கு முன் 51 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் மாரம்பேயுடனும் வேறு சில இராணுவ உத்தியோகத்தர்களுடனும் சம்பந்தப்பட்டபகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டேன்.

கல்லூரி சட்டடங்களைப் பொறுத்தவரையில் புனரமைப்புப் பணிகள் பலவுள. இவற்றுக்கு 7 மில்லியன் தொடக்கம் 10 மில்லியன் வரைச் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனைக் கல்வித் திணைக்களம் தாமதமின்றி நிறைவேற்றுமானால் அடுத்த வருடம் தை மாதம் பாடசாலை அங்கு நடத்தப்படலாம்.

மகாஜனக்கல்லூரியிலிருந்து சுமார் ½ மைல் சுற்றளவிற்கு மக்களை குடியமர விடுவார்கள் என்றும் அதற்கு மேற்கொண்டும் குடியிருக்கும்அனுமதியை மேலிடத்திலிருந்து பெறவேண்டும் எனவும் இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க தான் உத்தேசித்துள்ளதாக மேஜர் ஜெனரல் மாரம்பே தம்மிடம் தெரிவித்ததாக ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்தார்.

மேலும் இப்பகுதியைச்சூழவுள்ள பிரதேசங்களில் மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும். இப்பகுதிகளில் பற்றைகள், மரங்கள் வளர்ந்து காடு மண்டிக்காணப்படுகிறது

இதேவேளையில் இப்பகுதிகளில் துப்புரவுப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. வலி. வடக்கு பிரதேச ஊழியர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இந்தப் பணியில் ஈடுபடவுள்ளன.

விராங்கொடை, அம்பனை, கொல்லங்கலட்டி, புதுத்தோட்டம் ஆகிய பகுதிகளிலேயே முதற்கட்ட துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி பாடசாலை இயங்கத் தொடங்கிய பின்னர் அயல் பகுதிகளில் மக்கள் மீளக்குடியேற வசதிகள் செய்து கொடுக்கப்படுமெனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வலி. வடக்கில் மக்கள் மீளக்குடியேறல் மற்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மீண்டும் பழைய இடத்தில் இயங்க அனுமதித்தல் சம்பந்தமாக வலி. வடக்கு புனர்வாழ்வுக்கழகம் மற்றும் பொது அமைப்புக்கள் பலவும் அடிக்கடி அரசிடம் கோரிக்கை விடுத்தது தெரிந்ததே.

# பெரும்போக செய்கைக்குத் தேவையான உரவகைகள்

வலிகாமம் தெற்கு, ஒக. 17

இந்த வருட பெரும்போகத்துக்குத் தேவையான உரவகைகளுக்குத் தட்டுப்பாடு இல்லையென உடுவில் கமநல சேவை கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் தெரிவித்தார்.

''அமோனியா'' 260 அந்தர், ''யூரியா'' 425 அந்தர் ''ரீஎஸ்எம்'' 401 அந்தர், ''பீ1'' 531 அந்தர் ஆகியன கைவசம் இருப்பதாகவும்,

யூரியா தனிப்பசளை தருவிக்க கப்பலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். [இ-152]

# கப்பலில் கிழங்கு

அரியாலை, ஒக. 17

யாழ். நகரில் உள்ள தனியார் வர்த்தகர்கள் கப்பலில் உருளைக்கிழங்கை தருவித்துள்ளனர்.

தற்போது கிலோ 140 ரூபாவாக விற்கப்பட்ட கிழங்கு விலை வீழ்ச்சி அடையும் என்று நம்பப்படுகிறது [இ-17]

## 22 ஆவது நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 - 05 - 1914 | 30 - 08 - 1977 |

அமரர் **இ. செல்லையா**

(ஸ்தாபகர் - சன்லைற் றைக்கிளீனேர்ஸ்)

எமது அன்புத் தெய்வமே!
பாசமுள்ள தந்தையே!
நீங்கள் அணைந்து ஆண்டு 22 ஆனாலும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சுகின்றோம்.


மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

30/2, மருதடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[68210]

## மானிப்பாய் மாதா பெற்றெடுத்த மாந்தருள் மாணிக்கம்

''திறைசேரிக்கே கணக்கிலக்கணம் வகுத்துக் கொடுத்தவர்''



அமரர்

**அப்புக்குட்டி நாகலிங்கம்**

(கணக்காளர், திறைசேரி)

''தக்கார் தகவிலரென்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்''

இவரின் 10 ஆம் நினைவாண்டில் நினைவு கூரும்

வைத்திய கலாநிதி அறக்கட்டளை
அறங்காவலர்

மாதர் லேன்,
மானிப்பாய்.

(68186)

## மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா

18 - 08 - 1999



இன்றைய நாகரிகத்துக்கு ஏற்ற திருமணப் பட்டுப் புடைவைகள் சேட்டிங், சூட்டிங், றெடிமேட் ஆடைகள் அனைத்துக்கும் நாட வேண்டிய ஸ்தாபனம்



# மகா சில்க்ஸ்

நிகழும் பிரமாதி வருடம் ஆவணி மாதம் முதலாம்நாள் (18-08-1999) புதன்கிழமை காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை வரும் சிங்கலக்கின சுபவேளையில் ஆரம்பிக்க நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள். வாடிக்கையாளர்கள் அனைவரும் சமுகமளித்து திறப்பு விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர்

32, 40A, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(68041)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 - 06 - 1912 | 19 - 07 - 1999 |

அமரர்

**செல்லையா நித்தியானந்தராசா**

(முன்னாள் பாதுகாப்பு ஊழியர்-யாழ். பினான்ஸ் கம்பனி)

18 - 08 - 1999

மாதம் ஒன்று சென்றாலும் - உன்
நாத ஒலி எம் காதில் என்றும்
நிலைத்து நிற்கும் - உம் நினைவுகள்
என்றென்றும் எம் மனதை விட்டு அகலாது
எம் அன்புத் தெய்வமே.

எமது அன்புத் தெய்வம் சிவபதம் எய்திய செய்தி அறிந்து எமது துன்பத்தில் பங்கு கொண்டு, ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் யாவருக்கும், குறிப்பறிந்து பற்பல உதவிகளை உடனுக்குடன் செய்த அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, நாளை (18-08-99) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி!

மனைவி, மக்கள், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

அராலி வீதி,
சங்கானை.

(68238)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரர் குருபூசை

சுழிபுரம், ஒக. 17

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தை முன்னிட்டு வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இன்று முற்பகல் 11 மணிக்கு புராணபடனம், சுந்தரர் தேவாரம் ஓதல் மற்றும் விசேட பூசை என்பன இடம்பெறும். (இ-28)

★ ★ ★

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தினத்தை முன்னிட்டு கந்தர்மடம் ஆத்திசூடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்குச் சொற்பொழிவு மற்றும் தேவார பாராயணம் என்பன இடம்பெறும். (இ-7)

★ ★ ★

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சிவன் கோயிலில் இன்று காலை 7 மணிக்கு சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை இடம்பெறும். (இ-7)

# சிறுதொழில் முயற்சிக் கடன் தீவகப் பகுதி மக்களுக்கு

### ஐ. நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பு வழங்கும்

யாழ்ப்பாணம், ஒக. 17

ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பின்யாழ். மீள்குடியமர்வு புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் தீவகப் பகுதி மக்களுக்கு சிறு தொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கப்படவுள்ளது.

பல நோ. கூ. சங்கங்கள் ஊடாக இந்தக் கடன் உதவி வழங்கப்படும்.

வலிகாமம் பகுதியில் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

பண்டத்தரிப்பு, சுன்னாகம், அளவெட்டி, அச்சுவேலி ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக கடந்த வருடம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தக் கடன் திட்டம் சிறந்த பயனை அளித்துள்ளதாக கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ—5)


"இப்பொழுது ஒரு புதிய சேர்க்கை"

றொக்லண்ட்

ஹனப்பியர் பிரண்டி
லெமன் ஜின்
ட்றை ஜின்



மேலதிக பலத்துடன்
39% செறிவு
ரூ. 390/-

மேலதிக பலத்துடன்
38% செறிவு
ரூ. 385/-

மேலதிக பலத்துடன்
38% செறிவு
ரூ. 420/-

இப்போது யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்றது

ROCKLAND
றொக்லண்ட் டிஸ்றிலறிஸ் லிமிட்டெட்
ஏழ தசாப்தத்திற்கும் மேலான சிறந்த தரம்!

உத்தரவு பெற்ற சகல
மதுபான விற்பனை நிலையங்களிலும்
வாமாஸ் வைன் ஸ்ரோறிலும் கிடைக்கும்

(சி/8506)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகம் பயணம்

யாழ்ப்பாணம். ஒக.17

காஞ்சி காமகோடி பீடத்தில் 3 வருடகால சமஸ்கிருதப் பயிற்சியைப் பெறுவதற்கென தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 16 அந்தண மாணவர்களும் கடந்த மூன்றாம் திகதி தமிழ்நாடு பயணமானார்கள்.

இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம் மேற்படி பயிற்சிநெறிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. (இ-7)

## இந்து விடுதிக் கட்டடம் திறந்து வைப்பு

நல்லூர், ஒக. 17

யாழ்ப்பாணம்மாநகராட்சி மன்ற இந்து விடுதிக் கட்டடத் திருத்த வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன. கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் வைபவ ரீதியாக அதனைத் திறந்து வைத்தார்.

மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் உட்பட மாநகர சபை அதிகாரிகள் ஊழியர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-103-30)

## இலவச வகுப்பு

புன்னாலைக்கட்டுவன், ஒக. 17

புன்னாலைக்கட்டுவன் கணேசா சனசமூக நிலையம், கிராம மாணவர்களுக்கும் அயற் கிராமங்களைச்சேர்ந்த மாணவர்களுக்கும் இலவச வகுப்புக்களை ஒழுங்குசெய்து நடத்திவருகின்றது.

இந்த வருடம் டிசெம்பர் மாதம் ஜி. சி. ஈ. சாதாரண தரப்பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. [இ-133]

## பிரேத அறை

வலி.வடக்கு, ஒக. 17

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்திசாலையில் பிரேத அறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இடப்பெயர்வைத் தொடர்ந்து இந்த வைத்தியசாலை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்பாக கூட்டுறவு வைத்தியசாலைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற போதிலும் பிரேத அறையில்லாதது பெரும் கஷ்டநிலை இருந்து வந்தது.

வைத்திசாலைஅபிவிருத்திச் சங்கத்தின் முயற்சியினால் அவர்களின் நிதியில் இருந்து ஒரு பிரேத அறை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. [இ-86]

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
# வடக்கு - கிழக்கு மாகாணபொதுச் சேவையின் உள்ளூராட்சி திணைக்கள நூலகப் பொறுப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
## திறந்த மட்டுப்படுத்தப்பட்ட
# போட்டிப் பரீட்சை - 1999

01. வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவையில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள நூலகப் பொறுப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக திறந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளரினால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 1999 - 09 - 15 ஆகும்.

02. இப்பதவிக்குரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 120 ஆகும். இவ் வெற்றிடங்களில் 75% மான வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும் 25% மான வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையிலும் நிரப்பப்படும். மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை மேற்கூறப்பட்டவாறு இருந்த போதிலும் சேவையின் தேவையைப் பொறுத்து வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவதற்கோ அல்லது கூடுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும் வெற்றிட எண்ணிக்கை தொடர்பான இறுதித் தீர்மானம் வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

## 03. சேவைக்கான நிபந்தனைகள்:

1. இப்பதவி நிரந்தரமானதும் ஒய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெற்றவர்கள் விதவைகள், அனாதைகள், தபுதாரர். அனாதை ஓய்வூதிய திட்டத்திற்கு உதவித்தொகை செலுத்துமாறு வேண்டப்படுவார்கள்.
2. இது ஒரு இடமாற்ற சேவையாகும். சகல அலுவலர்களும் வடக்கு- கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திற்கும் இடமாற்றம் செய்யக் கடமைப்பட்டவர்களாகும்.

## 04. சம்பள அளவுத்திட்டம்:

ரூபா 67.320 10 × 1, 560 – 6 × 2, 460 – 97 680 (T-11-1)

## 05. தகைமைகள்:

### 5.1 திறந்த போட்டிப் பரீட்சைக்கான தகைமைகள்

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்ப முடிவுதிகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

ஈ. வடக்கு — கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது வடக்கு — கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்கள் மூலம் நேர்முகப் பரீட்சையின் போது இவற்றை நிரூபித்தல் வேண்டும்.
  1. வாக்காளர் இடாப்பின் பிரதி
  2. கிராமசேவை உத்தியோகத்தரிடம் பெற்ற சான்றிதழ்

உ. கல்வித்தகைமைகள்:

1. க. பொ. த[சா/த] அல்லது அதற்குச் சமமான ஒரு பரீட்சையில்

I) சிங்களம் / தமிழ்மொழி, உடன் எண்கணிதம் / ஆரம்ப கணிதம் தூயகணிதம் / கணிதம் அடங்கலாக ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு(06)பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

II) 03 பாடங்களுடன் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

III) மேலே 1 இன் (I) (II) இன் கீழ் குறிப்பிட்டுள்ள கல்வித்தகைமைகளுடன் இலங்கை நூலகச் சங்கத்தின் முதலாவது பரீட்சையில்

அல்லது

IV) இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் நூலகவியல் சான்றிதழ் பரீட்சையின் 1 ஆம் பகுதியில் சித்தியெய்தி தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு: மேற்குறித்த தகைமைகளைக் கொண்ட வடக்கு கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள நிரந்தர அமைய அலுவலர்களும் விண்ணப்பிக்கலாம்.

### 5.2 மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான தகைமைகள்:

1. க.பொ.த(சா/த) அல்லது அதற்குச் சமமான ஒருபரீட்சையில்

I) சிங்களம் / தமிழ்மொழி உடன் எண்கணிதம் / ஆரம்ப கணிதம் / தூயகணிதம் / கணிதம் அடங்கலாக ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்த வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை நூலக உதவியாளர்கள் / பணியாளர்கள் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு 10 வருடங்கள் திருப்திகரமாகச் சேவையாற்றி உள்ளவர்கள் நூலகப் பொறுப்பாளர் தரம் III பதவிக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர். இதன்பொருட்டு வயதெல்லைகள் வலுப்படாது

குறிப்பு: விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் உரிய பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகள் எதிர்பார்த்து சமர்ப்பித்த விண்ணப்பங்கள் நேர்முகப்பரீட்சையில் நிராகரிக்கப்படும். இந் நிபந்தனைகள் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகள் இரண்டிற்கும் பொருந்தும்.

## 06. ஆட்சேர்ப்பு முறை:

எழுத்துப்பரீட்சைப் பெறுபேற்றின் திறமை அடிப்படையிலும் அரசாங்க தாபன கோவை விதிகள் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம், அரச சுற்று நிருபங்கள் ஆகியவற்றுக்கு இணங்க ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

## 07. எழுத்துப் பரீட்சை:

எழுத்துப் பரீட்சையானது சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படும். இவ் எழுத்துப் பரீட்சை கீழ்க் குறிப்பிடப்பட்ட இரு வினாப்பத்திரங்களையுடையதாகவிருக்கும்.
  1. பொது அறிவு — ஒரு மணித்தியாலம்,
  2. நூலகவியல் — இரண்டு மணித்தியாலங்கள்.

குறிப்பு: திறந்த போட்டிப்பரீட்சை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக ஒரே பரீட்சையை நடத்தி பரீட்சையில் அடையும் திறமையின் அடிப்படையிலும் விகிதாசார அடிப்படையிலும் நியமனங்கள் செய்யப்படும்.

## 08. நேர்முகப் பரீட்சையின் போது தகைமைகள் பரிசீலிக்கப்படும். இதன்போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

## 09. பரீட்சைக் கட்டணம்:

விண்ணப்பதாரி வதியும் வடக்கு- கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200 செலுத்தியதற்கான பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் கழராதவாறு ஒட்டி இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் 6004 இலக்க வைப்புக் கணக்கில் வரவில் சேரக் கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச் சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் எக்காரணங் கொண்டும் செலுத்திய பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

## 10. விண்ணப்பிக்கும் முறை:

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களுக்கமைவாக திறந்த போட்டிப் பரீட்சைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கும் வெவ்வேறான விண்ணப்பப் படிவங்கள் ஏ4 அளவிலான ( 21 செ.மீ × 29 செ.மீ ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களை ஒழுங்கு செய்து கொள்ளல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 10 வரையுள்ள பகுதியை அதன் முதற்பக்கத்திலும் எஞ்சிய பகுதியை இரண்டாம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் ஒழுங்கு செய்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 1999 – 09 – 15 ஆம் திகதிக்கு முன் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு — கிழக்கு மாகாணம், இல 35, மக்கேய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வடக்கு — கிழக்கு மாகாண பொதுச் சேவையின் உள்ளூராட்சித்திணைக்கள நூலகப் பொறுப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 1999" என பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். (மாகாண அரசாங்க உள்ளூராட்சி சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும் ) பூரணமற்றதும் உரிய தகைமைகளைக் கொண்டிராததும் குறித்த திகதிக்கு முன் கிடைக்கப்பெறாததுமான விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவரென கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது நிரந்தர நியமனத்தைப் பெற்ற பின்போ எக்கட்டத்திலும் அவரின் நியமனம் இரத்துச் செய்யப்படலாம் விண்ணப்பதாரி ஒருவர் அளித்த விவரங்கள், சான்றிதழ்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் அல்லது அவர் ஏதேனும் முக்கிய விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் தெரிவிலிருந்து அல்லது சேவையிலிருந்து நீக்கப்படலாம்

11. பரீட்சை நடத்துவதற்த உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் — 1 | கிளிநொச்சி — 4 | மட்டக்களப்பு — 7 |
| மன்னார் — 2 | முல்லைத்தீவு — 5 | அம்பாறை — 8 |
| வவுனியா — 3 | திருகோணமலை — 6 | கல்முனை — 9 |

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகரம் அண்மையான நகரத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத குறிப்பிடப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பாகவும், தப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தெரிவு நியமனங்கள் தொடர்பாகவும் வடக்கு—கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதியானதும் முடிவானதுமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

க. பரமேஸ்வரன்,
செயலாளர்.

மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம்.
திருகோணமலை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# மாதிரி விண்ணப்பப்படிவம்

(திறந்த போட்டிப்பரீட்சை)

வடக்கு-கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்கள நூலகப் பொறுப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான

## திறந்த போட்டிப் பரீட்சை - 1999

சுட்டெண்:

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்:
வண. / திரு / திருமதி / செல்வி
(தமிழில் / ஆங்கிலத்தில்)
02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:
(தமிழில் / ஆங்கிலத்தில்)
03. தற்போதைய நிரந்தர முகவரி:
(தமிழில் / ஆங்கிலத்தில்) பெரிய எழுத்துக்களில்
04. பால் ஆண் M / பெண் F
05. பரீட்சைக்குத் தோற்றும் மொழி:
தமிழ் T சிங்களம் S ஆங்கிலம் E
06. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்:
(11 ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)
07. இனம்
சிங்களவர் — 1 இந்தியத் தமிழர் — 4
இலங்கைத் தமிழர் — 2 ஏனையவர் — 5
முஸ்லிம் — 3
08. நீங்கள் இலங்கைப் பிரஜையா?
வம்சாவளியினாலா / பதிவு செய்யப்பட்டதனாலா என்பதைக் குறிப்பிடுக
09. விவாகமானவரா / விவாகமாகாதவரா?
10. பிறந்த திகதி: வருடம்: மாதம்: திகதி:
1999 - 09 – 15 திகதியன்று வயது:
வருடங்கள்: மாதம்: நாள்கள்:
11. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்
(2) பிரதேச செயலாளர் பிரிவு
(3) வதியும் கால எல்லை: தொடக்கம் வரை
12. தகைமைகள்:
12.1 கல்வித் தகைமைகள்:

க. பொ. த. (சா/த) 1ஆம் அமர்வு ஆண்டு சுட்டிலக்கம்

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

க. பொ. த. (சா/த) 2ஆம் அமர்வு ஆண்டு சுட்டிலக்கம்

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

க. பொ. த. (உ/த) ஆண்டு சுட்டிலக்கம்

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

12-2 ஏனைய தகைமைகள்:
பந்தி 5.1 உ இன் (III), (IV)க்கு அமைவாக)

| ஆண்டு | பரீட்சையின் பெயர் | சான்றிதழ் பெற்ற நிறுவனம் | சித்தியின் தரம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |

13. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

14. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட ............ பிரதேச செயலகத்தின் .............. ஆம் இலக்க ............ ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் எனது இணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்

திகதி ............................................ விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:
விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற வண/திரு/திருமதி/செல்வி. .......... என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் ........... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்

திகதி: ............................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப் பெயர்:
பதவி:
முகவரி (பதவி முத்திரை)
(விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, [illegible] தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 74, 160/-ற்கு மேற்பட்ட வருடாந்த திரட்டிய வேதனமாக உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

12. விண்ணப்பதாரர் மாகாண பொதுச்சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் விதப்புரை
திணைக்களத் தலைவரின் உறுதியுரை:
இத்திணைக்களத்தில் தற்காலிக/ நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
வண/ திரு/ திருமதி/ செல்வி ........... அவர்களின் விண்ணபத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக் காலத்தில் எவ்வித ஒழுக்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ............................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பெயரும்.

பதவி:
முகவரி: (பதவி முத்திரை)

# மாதிரி விண்ணப்பப்படிவம்

(மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை)

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவைகளின் உள்ளூராட்சித் திணைக்கள நூலகப் பொறுப்பாளர் தரம் 111 பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக மாகாண பொதுச் சேவையில் நூலக உதவியாளர்/ நூலகப் பணியாளர் பதவியில் உள்ளவர்களுக்கான

## மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 1999

சுட்டெண்:

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்:
வண / திரு / திருமதி / செல்வி:
(தமிழில் / ஆங்கிலத்தில்)
02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:
(தமிழில் / ஆங்கிலத்தில்)
03. தற்போதைய நிரந்தர முகவரி:
(தமிழில் / ஆங்கிலத்தில்) பெரிய எழுத்துக்களில்
3. 1. அலுவலக முகவரி:
(தமிழில்/ஆங்கிலத்தில்) பெரிய எழுத்துக்களில்
04. பால் ஆண் M / பெண் F
05. பரீட்சைக்குத் தோற்றும் மொழி
தமிழ் T சிங்களம் S ஆங்கிலம் E
05. தெரிவுசெய்யும் பரீட்சை நகர எண்
(11ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)
07. இனம்
சிங்களவர் — 1 இந்தியத் தமிழர் — 4
இலங்கைத் தமிழர் — 2 ஏனையவர் — 5
முஸ்லிம் — 3
08, நீங்கள் இலங்கைப் பிரஜையா?
வம்சாவளியினாலா / பதிவுசெய்யப்பட்டதனாலா என்பதைக் குறிப்பிடுக.
09. விவாகமானவரா / விவாகமாகாதவரா?
10. பிறந்த திகதி: வருடம்: மாதம்: திகதி:
1999 – 09 – 15 திகதியன்று வயது:
வருடங்கள்: மாதம்: நாள்கள்:
11. தற்போதைய பதவி
12. முதல் நியமனத் திகதி
13. இச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி
14. 10 வருட சேவையை பூர்த்தி செய்த திகதி
15. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்
(2) பிரதேச செயலாளர் பிரிவு
(3) வதியும் கால எல்லை தொடக்கம் வரை
16. தகைமைகள்
16.1 கல்வித் தகைமைகள்

க. பொ. த. (சா/த) 1ஆம் அமர்வு ஆண்டு சுட்டிலக்கம்

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

க. பொ. த. (சா/த) 2ஆம் அமர்வு ஆண்டு சுட்டிலக்கம்

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

16.2 ஏனைய தகைமைகள்

| ஆண்டு | சான்றிதழ் பெற்ற நிறுவனம் | பரீட்சையின் பெயர் | சித்தியின் தரம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |

17. பணம் செலுத்திய பற்றுச் சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

(9ஆம்பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருபெல்லா எனும் ஜேர்மன் சின்னமுத்துவினால் கருப்பையில் வளரும் குழந்தைக்கு அபாயம்

ருபெல்லா தடுப்பு மருந்து ஏற்றல்.

★ தீங்கில்லாதது
★ ஒரே ஓர் ஊசி மட்டும் போதுமானது
★ ஏறக்குறைய 100 சதவீத பாதுகாப்பு அளிக்கும்
★ ஒருமுறை கொடுப்பதால் எதிர்வரும் எல்லா கர்ப்ப காலங்களிலும் பாதுகாப்பு அளிக்கும்
★ தடுப்பு மருந்து பெற்று குறைந்தது 3 மாத காலத்துக்குள் கருத்தரித்தல் கூடாது.
★ சின்னமுத்து நோய் ஏற்பட்டால் அல்லது சின்னமுத்துத் தடுப்பு மருந்து பெற்றிருந்தால் ருபெல்லா வராமல் தடுப்புச்சக்தி உள்ளதெனக் கூற முடியாது.
★ முன்பு ருபெல்லா ஏற்பட்டிருந்தாலும் ருபெல்லா தடுப்பு மருந்தைப் பெறுவதனால் ஒரு தீமையும் ஏற்படாது.

● ருபெல்லா [ஜேர்மன் சின்னமுத்து] என்றால் என்ன?

▼ இது ருபெல்லா[Rubella] எனும் ஒரு வைரசினால் உண்டாகும் நோய் ஆகும். வழமையாக இது ஒரு தீவிரமான நோய் அல்ல. ஆனால் கர்ப்பிணித்தாய்மாருக்கு கர்ப்ப ஆரம்ப மாதங்களில் இந்த நோய் ஏற்படுமிடத்து அது சிசுவுக்கு மிகப்பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இந்த நோய் 1941 வரை ஒரு சாதாரணமான நோயாகவே இருந்தது. நோர்மன் க்ரெக் [ Norman Greg ] என்னும் கண் சிகிச்சை நிபுணர் சில பிறவிப் பார்வைக் குறைபாடுடைய சிசுக்கள் வேறு சில பிறவிக் குறைபாடுகளுடன் இருந்தமையையும் இந்த சிசுக்களின் தாய்மாருக்கு கர்ப்ப ஆரம்ப காலங்களில் ஜேர்மன் சின்னமுத்து நோய் இருந்ததையும் அவதானித்தார்.

அவரின் இந்த கண்டு பிடிப்பானது இது ஒரு சாதாரண நோய் என்ற கருத்தை மாற்றி இது கருவின் வளர்ச்சியை சிதைக்கும் ஆற்றலுள்ளது எனவும் அறியப்பட்டது.

● சின்னமுத்து நோயும் ஜேர்மன் சின்னமுத்து நோயும் ஒன்றா?

▼ இல்லை. இரண்டும் வெவ்வேறு வைரசுக்களால் ஏற்படும் இரண்டு வெவ்வேறு வகையான நோய்களாகும்.

● ருபெல்லா நோய் எவ்வாறு பரவுகின்றது?

▼ சிறு துளி தொற்று மூலம் நோயாளியிலிருந்து இன்னொருவருக்கு நேரடியாகப் பரவுகின்றது. இந்த நோயின் தொற்றும் பருவம் இதன் ஒரு குணங்குறியாகிய சொறி தோன்றுவதற்கு 7 நாள்கள் முன்பிருந்து சொறி மறைந்த பின் 7 நாள்கள் வரையும் உள்ளது.

● இந்த நோயின் அறிகுறிகள் எவை?

▼ பெரும்பாலான சந்தர்ப்பங்களில் (50–65%) இந்த நோய் அறிகுறிகள் அற்றதாகவே காணப்படுகின்றது. வைரஸ் உட்சென்று 2அல்லது 3 வாரங்களுக்கு (நோயரும்பு காலம்) பின் உடலில் சொறி(புள்ளிகள்)தென்படும். சொறி தென்பட்ட 2 நாள்களுக்கு முன் மெல்லியகாய்ச்சல், தொண்டை நோவு, தலையிடி, சளி என்பன இருக்கக்கூடும்.

▼ சருமத்தில்இளஞ்சிவப்பு அல்லது தவிட்டு நிறத்தில் சொறி [புள்ளிகள்] தோன்றும்.

▼ புள்ளிகள் முதலில் முகத்திலும் கழுத்திலும் ஏற்பட்டு பின் ஏனைய இடங்களுக்குப்பரவும்.

▼ இவை ஓர் இடத்தில் மறையும்போது வேறு ஓர் இடத்தில் தென்பட ஆரம்பிக்கும்.

▼ இந்தநோயினால் அடையாளங்கள். உண்டாவதில்லை இந்தச் சொறி 3 நாள்களுக்குள் முற்றாகமறைந்துவிடும்.

▼ புள்ளிகள் தொடங்குவதற்கு 7 நாள்கள் முன்பிருந்து கழுத்தின் பின்புறம் நோவுடன் கூடிய நெறிகள் காணப்படும். இந்த நெறிகள் சொறி மறைந்த பின்னும் 10 முதல் 14 நாள்கள் வரை காணப்படலாம்.

▼ மிக அரிதாக சில இளம் பெண்களில் மூட்டுநோவு முளையழர்ச்சி என்பன ஏற்படலாம்.

▼ இந்த நோய் சொறி, சின்னமுத்து நோயைவிட மிக விரைவாகப் பரவும். அத்துடன் விரைவாக மறைந்தும் விடும்.

● ஏன் ருபெல்லா முக்கியமாகக் கருதப்படுகின்றது?

▼ பொதுவாக இந்தநோயினால் பாதிப்புகள் ஏற்படுவதில்லை. ஆனால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்த நோய் ஏற்படும்போது அது சிசுவுக்கு மிகவும் பாரதூரமான 'பிறவி ருபெல்லாக் குறைபாடு' (Congenital Rubella Syndrome) என்னும் நிலையை ஏற்படுத்தும்.

▼ பிறவி ருபெல்லாக் குறைபாடு

▼ பிறப்பு நிறைக் குறைவு (Low Birthweight)

▼ பிறவிச் செவிட்டுத் தன்மை (Congenital Deafness)

▼ பிறவிப் பார்வைக் குறைபாடு (Congenital Catteract)

▼ இருதயக் குறைபாடு (Cardiac Malformations) — இதயவறைஇடைப்பரிசுவர் குறைபாடு

▼ சிறுதலையுடைய சிசுக்கள்

▼ கருப்பையினுள் சிசுவின் வளர்ச்சிகுன்றிக்காணப்படல் (Intra Uliterine Growth Retardation.

▼ குளுக்கோமா (Glucoma)

▼ விழித்திரைப் பாதிப்பு (Retinapathy)

▼ மூளையின் செயற்திறன் குறைவடைதல் Cere-bral Palsy)

▼ ஈரல், மண்ணீரல் பருமனில் பெரிதாகுதல் (Hepato Speenomegaly)

▼ மூளைவளர்ச்சி குன்றிக் காணப்படல் (Mental Retardation)

▼ செயற்திறன் குன்றிக் காணப்படல் (Motor Retard-ation)

மேலுள்ள குறைபாடுகள் தனித்தனியாகவோ அன்றி சேர்ந்தோ வெளிக்காட்டப்படலாம்.

கர்ப்பிணிகளுக்குக் கடும் நோய்த் தொற்று ஏற்படும் இடத்து கருச்சிதைவு அல்லது குழந்தை இறந்து பிறத்தல் (still Birth) என்பன ஏற்படலாம்.

● இந்தபாரதூரமான நோய் ஏற்படாமல் தடுக்கமுடியுமா?

▼ ஆம் கர்ப்பந்தரிக்க குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன் ருபெல்லாத் தடுப்பூசி ஏற்றி ருபெல்லாவிலிருந்து உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

▼ 11—44 வயது வரையுள்ள சகல பெண்களும் தடுப்பூசி பெற்றுக் கொள்ளவேண்டும்.

● ருபெல்லாத் தடுப்பூசி ஏற்றுவதிலிருந்து தவிர்க்கப்பட வேண்டியவர்கள்.

(1) கர்ப்பிணிகள் - பெண் கருவுற்றிருந்தால் ருபெல்லாத் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளக் கூடாது.

(2) கடும் தொற்று நோய் உள்ளவர்கள் வைத்திய ஆலோசனை இன்றி தடுப்பூசி பெற்றுக்கொள்ளக் கூடாது.

(3) முட்டைப்புரதம் அல்லது நியோமைசின் (Neomycin)மருந்துக்கு அழற்சியுள்ளவர்கள் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளக்கூடாது.

(4) நிர்ப்பீடனக் குறைபாடுடையவர்கள் Immune deficiency அல்லது இயற்கை நிர்ப்பீடனத்தை குறைக்கும் மருந்துகள் Immune Suppressive drugs எடுப்பவர்கள் தடுப்பூசி ஏற்றிக்கொள்ளக் கூடாது.

ருபெல்லாத் தடுப்பூசி ஏற்றுவதால் 1 — 3 கிழமைகளின் பின் மெல்லிய காய்ச்சல், தொண்டை நோவு, சொறி நெறிபோடுதல் என்பன சிலரில் ஏற்படலாம்.

ஒருமுறை நோய் வந்தால் மீண்டும் நோய் வராமல் இருக்க இயற்கை நிர்ப்பீடனம் உதவுகிறது இரண்டாம் முறை நோய் வருவது மிக அரிது. ருபெல்லாத் தடுப்பூசி ஏற்றப்பட்ட தாய்மாருக்கு பிறக்கும் குழந்தைகள் 4-6 மாதங்ளுக்கு இந்தநோய்க்கு எதிரான எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருப்பார்கள். தாய்மாருக்கு தடுப்பூசி அளிக்கப்படாதவிடத்து வயது வந்தோரில் 10 - 40 சதவீதமானோர் இந்த நோயினால் பாதிக்கப்படாமலேயே தம் குழந்தைப் பருவத்தைக் கடந்து விடுகின்றனர். எனவே பெரும்பாலான கர்ப்பந்தரிக்கும் தகவுள்ள பெண்கள் இந்த நோயினால் பாதிக்கப்படக் கூடியவர்களாகவே காணப்படுகின்றனர்.

இந்தக்கொடிய ருபெல்லா நோயிலிருந்து எமது வருங்கால சந்ததியைப் பாதுகாக்க நாம் கட்டாயம் ருபெல்லாத் தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

மருத்துவ மாணவர்கள் குழு
யாழ். மருத்துவ பீடம்.

★

# கோப்பாய்ப் பிரிவில் நாய்களுக்கு தடுப்பூசி

வலி. கிழக்கு, ஓக. 17

கோப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் நாளை புதன்கிழமை முதல் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட உள்ளது.

நாளை புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் தடுப்பூசி போடப்படும் இடங்கள் வருமாறு:-

நாளை

★ 9.00 — 10.30— கோப்பாய் வடக்கு, சபா வீதி, நாவலர் ச. ச. நிலையம்.

★ 10.45 — 12.30—கோப்பாய் வடக்கு, கந்தசாமி கோயிலடி ச. ச. நிலையம்.

★ 12.45 — 2.00—கோப்பாய் வடக்கு, வள்ளி அம்மன் ச. ச. நிலையம்.

★ 2.00 — 3.30 — கோப்பாய் வடக்கு, சூசையப்பர் கோயிலடி ச. ச. நிலையம்.

வியாழன்

★ 9.00— 10.30 — வெள்ளெருப் பிள்ளையார் கோயிலடி ச. ச. நிலையம்.

★ 10.45—12.30— கோப்பாய் மத்தி, நாவலடி ச. ச. நிலையம்.

★ 12.45 — 2.00—மாதா கோயிலடி.

★ 2.00 — 3.30 — இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவு. (ஐ-180)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 17

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி இளங் கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா தேவிமணிமண்டபத்தில்நடைபெற்றுவரும் தெய்வீக இசை அரங்கில் இன்று செவ்வாய்க் கிழமை மாலை 5-30 மணி முதல் மாலை7-00மணி வரை பண்ணிசை நடைபெறும்.

இந்த நிகழ்வில் எஸ் ஆர்- திருஞானசம்பந்தன் பாட்டும் எஸ். திவாகரன் வயலின் இசையும் எஸ். துரைராஜா மிருதங்க இசையும் நிகழ்த்துவர்.

# 6 ஆயிரத்து 500 பேருக்கு விரைவில் மின்சாரம்

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ். மாவட்டத்தில் மேலும் 6 ஆயிரத்து 500 பேருக்கு மின்சாரசபையினால் மின்சாரம் வழங்கப்பட உள்ளது.

மின்சார சபையினால் தற்பொழுது யாழ்மாவட்டத்தில் 16 ஆயிரத்து 936 பேருக்கு 24 மணி நேர மின் விநியோகமும் 8 ஆயிரத்து 56 பேருக்கு சுழற்சி முறையிலும் மின் விநியோகமும் செய்யப்பட்டு வருகிறது. (ஐ-5)

# இளைஞர் சரண் அடைவு

சந்தேகத்தின் பேரில் பொலீஸாரினால்தேடப்பட்டு வந்த இளைஞர் ஒருவர் சட்டத்தரணியின் அனுசரணையுடன் பொலீஸாரிடம் சரணடைந்தார்.

மானிப்பாய்ப் பகுதியில் குடும்பப் பிரச்சினை தொடர்பாக தனது மாமியாரைத் தாக்கியதாகக் கூறப்படும் இந்த இளைஞரை பொலீஸார் பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்தனர்.

பொலீஸாரின் அழைப்பை ஏற்று பொலீஸ் நிலையத்துக்கு செல்லத் தவறிய இவர் சட்டத்தரணியின் அனுசரணையுடன் மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

இவரிடமிருந்து வாக்குமூலத்தை பதிவு செய்த மானிப்பாய் பொலீஸ் நிலைய உதவிப் பொலீஸ் பரிசோதகர் சட்டத்தரணியின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி இளைஞரை அவரது தாயாரிடம் ஒப்படைத்தனர். (இ-5)

# போட்டிப் பரீட்சை...

(8 ஆம் பக்கத் தொடர்)

18. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .............. பிரதேச செயலகத்தின் .................. ஆம் இலக்க.......... ஆம் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப் பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நான் கடந்த 10 ஆண்டு சேவைக்காலத்தினுள் எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்ளையும் உழைத்துப் பெற்றுள்ளேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி

..........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

19. **திணைக்களத் தலைவரின் உறுதியுரை:**

இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வண திரு/ திருமதி / செல்வி ........................ அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுக்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் அவரால் இங்கு குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகிறேன். (ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப் பட்டிருப்பின் அல்லது வேதன ஏற்றத்தைப்பெறத் தவறியிருப்பின் விவரங்களைக் குறிபிடல் வேண்டும்)

திகதி

..........................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பெயரும்

பதவி:
முகவரி: [பதவி முத்திரை]

[ C/8520 ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இலங்கை மின்சார சபைக்கு 9 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டது.

அண்மைக் காலத்தில் இது வரை வவுனியாவில் தகர்க்கப்பட்ட மின் மாற்றிகளின் எண்ணிக்கை இவற்றுடன் சேர்த்து 26 ஆக அதிகரித்துள்ளது.

தகர்க்கப்பட்ட பல இடங்களிலும் இதுவரை புதிதாக மின்மாற்றிகள் பொருத்தப்படவில்லை. (ஐ-7-164)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்)

சச்சரவுப்பட்டுக் கொண்டு யாழ். நகரப் பகுதியில் உள்ள கடை ஒன்றில் வந்து தங்கி நின்றதாகவும்—

அவர்களைத் தாங்கள் அழைத்துச் சென்று தமது முகாமில் வைத்துள்ளதாகவும் ஈ.பி.டி.பி. அமைப்பினர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணைப் பதிகாரியிடம் தெரிவித்துள்ளனர். (ஐ-7-9)

## நல்லூர்க்...

[முதலாம் பக்கத் தொடர்[

தொண்டர் அமைப்புக்களையும் சேர்ந்த தொண்டர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை—

உற்சவத்தில்கலந்துகொள்ள வரும் பக்தர்கள் தங்கநகைகளை அணிந்து வருவதை இயன்றளவு தவிர்த்துக்கொள்ளுமாறும் பெறுமதிமிக்க பொருள்களை எடுத்து வருவதையும் தவிர்க்குமாறும்—

யாழ் மாநகரசபை வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.

உற்சவத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்துகொள்ளும் சமயம் சன நெரிசலைப் பயன்படுத்தி திருடர்கள் மதுகைவரிசையைக் காட்டலாம் ன எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

[ஐ-7-6-9-103-30]


விசேட

ஆங்கில வகுப்புகள்

20-08-99 10-00 A M
(முதலாம் பிரிவு)

இடம்: இமையாணன்
கலைமகள் ச.ச. நிலையம்
உடுப்பிட்டி

பதிவு: சிலைன்ஸ்
கொம்ளக்ஸ், வதிரி வீதி,
உடுப்பிட்டி.

20-08-99 4.00 P. M.
(2ஆம் பிரிவு)

இடமும் வதிவிடமும்:
கெங்கா கல்வி நிலையம்
கிராமக்கோட்டடி,
புலோலி கிழக்கு.

By Mr. T. Sutha
(B. B A. Hons)

(68245)



### விற்பனைக்கு

கொழும்பிலிருந்து
அண்மையில் கொண்டு
வரப்பட்ட

புத்தம் புதிய
Konica
போட்டோ கொப்பி
மிசின்

உடன் விற்பனைக்கு
உண்டு.

தொடர்புகளுக்கு:

அம்பாள் கொமினிகேசன்
கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

(68255)


### பலத்த பாதுகாப்புடன் இன்று நடைபெறும்

# கண்டி பெரஹராவை ஒட்டி 30க்கு மேற்பட்டோர் கைது!

கொழும்பு, ஓக. 17

கண்டியில் இன்று நடைபெறும் எசல பெரஹராவை முன்னிட்டு கண்டி நகரத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் படையினர் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளின்போது சந்தேகத்தின் பேரில் நேற்றுவரை 30 க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி காமினி நவரத்தினதெரிவித்துள்ளார்.

விடுதிகள், வாடி வீடுகள், வங்கிகள் மற்றும் கண்டி வாவியைச் சூழ்ந்த பகுதிகளில் கடமைபுரிவதற்கென பொலீஸாருக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ள தாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பெரஹரா நிகழ்ச்சிகள் முடிவுறும் வரை பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் எனவும்—

அதேவேளை கண்டி நகருக்குள் இன்று நுழையும் சகல வாகனங்களும் மோப்ப நாய்கள் மூலம் தீவிரசோதனைக்கு உட்படுத்தப்படும் எனவும்— மத்திய மாகாணப் பொலீஸ் நிலையவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[ஐ-7]

## ஒட்டுசுட்டானில் தாக்குதல்

கொழும்பு, ஓக. 17

ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் காலை திடீர் தாக்குதல் மேற்கொண்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

புலிகளின் தாக்குதலை அடுத்து படையினர் பதில் தாக்குதல் நடத்தினர் எனவும்—

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 5 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## ஞாயிறன்றே நேர்முகப்பரீட்சை

பட்டப்பின் கல்வித்தேர்வு (உள்வாரி) நேர்முகப் பயிற்சிநெறிக்கு ஆள்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். கல்வி வலயத்தில் நடைபெற உள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அது ஒரு நாள் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி நெறிக்கென எழுத்துப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அவர்களது பாடசாலை முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் யாழ். வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## சமய நிகழ்வுகளில்

யாழ்ப்பாணம், ஓக.17

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்தில் ஆடிச் செவ்வாய் தினத்தை முன்னிட்டு இன்று மாலை 5 மணிக்கு அபிஷேகமும் ஆராதனைகளும் இடம்பெறும். (ஐ-7)

★ ★ ★

தொல்புரம், ஜெகஜோதி அம்மன் ஆலயத்தில் ஆடிச் செவ்வாய் தினத்தை முன்னிட்டு இன்று மாலை 4 மணிக்கு அபிஷேகமும் ஆராதனைகளும் இடம்பெறும்.

விசேடநிகழ்ச்சியாக பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய பஜனைக்குழுவினர் வழங்கும் 'பக்திரச கீதங்கள்' இசை நிகழ்ச்சியும் இடம் பெறும். (ஐ-7)

## மரக்கறி, பழவகைகளை பதனிடும் நிலையங்கள் குடாநாட்டில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்ப்பாணத்தில் விவசாய விளைபொருள்கள் பதனிடுவதற்கான இரு பதனிடும் நிலையங்களை அமைப்பதற்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

வலிகாமம், தென்மராட்சி பகுதிகளில் இந்த நிலையங்களை அமைப்பதற்குத்திட்டமிடப்பட்டுள்ள போதிலும் முதலில் வலிகாமம் பகுதியில் பதனிடும் நிலையத்தினை அமைத்து அதனால் கிடைக்கும் பெறுபேறுகளை அடுத்தே தென்மராட்சியிலும் ஒரு நிலையம் அமைக்கப்படும் என்று பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் யாழ். அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூரில் உற்பத்தியாகும் மரக்கறி மற்றும் பழவகைகளை பதனிட்டு தேவைக்கேற்ப பயன்படுத்தும் வகையில் போத்தல் மற்றும் பைக்கற்றுக்களில் அடைத்து வைத்து விநியோகிக்கும் பொருட்டே இந்தப்பதனிடும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

பதனிடும் நிலையம் அமைக்கப்படுவதன் மூலம் யாழ். மாவட்டத்தில் சந்தை வாய்ப்பின்றி தேங்கிக் கிடக்கும் மரக்கறிகள் மற்றும் பழவகைகளுக்குச்சந்தைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

விவசாயவிளை பொருளை பதனிடும் நிலையங்களை அமைப்பதற்கு 32 லட்சத்து 40 ஆயிரம் ரூபா வரையில் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பதனிடும் நிலையம் மூலம் வருடம் முழுவதும் பழவகைகளை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு வழங்கப்படும். (ஐ-5-ரி)

## தீவுப் பகுதியில் மின்சார விநியோகம் சீரில்லை

வேலணை, ஓக. 17

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு சீரான முறையில் மின்சாரம் வழங்கப்படாததனால் அந்தப்பகுதி பாவனையாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

வேலணை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்களுக்கு மேலாகியும் இது வரைகாலமும் அந்தப்பகுதிகளுக்கு மின்சாரம் சீரான முறையில் வழங்கப்படவில்லை.

வேலணை, நயினாதீவு ஆகிய பிரதேசங்களில் சில பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் அதுகூட சீராகக் கிடைப்பதில்லை என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, புங்குடுதீவு ஆகிய பிரதேசங்களுக்கு முற்றாக மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் அந்தப்பகுதி வாழ் மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர். (ஐ-167)

## மட்டு..

(முதலாம் பக்கத் தொடர்)

படி எல்லைப்புறக் கிராமங்களான பந்துலங்காபுர, கட்டுவன் வில்லு, மல்கிந்த பகுதி வாசிகள் நேற்று ஆர்பாட்டம் ஒன்றை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-21)

## புலிகளுடன்.--

(முதலாம் பக்கத் தொடர்)

இடையில் உள்ளூரில் மத்தியஸ்தம் வகிக்க எவர் முன்வருவார்கள்? இது சாதாரணமானதொரு வேலையல்ல. புலிகள் அரசை நம்புவதில்லை. அரசும் புலிகளை நம்புவதில்லை, இதனால் சிறந்ததொரு வெளிநாட்டு மத்தியஸ்தரை கொண்டு வருவதே நல்லது.

வன்னிக்கான தரைவழிப் பாதையைத் திறப்பதற்கு படையினரும் புலிகளும் கதைத்துப்பேசி அதனை நிறைவேற்ற முடியுமென்றால் ஏன் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசும் புலிகளும் பேசக்கூடாது?. இந்த முறையை பயன்படுத்தி இருதரப்பும் மூன்றாந் தரப்பு மத்தியஸ்தர் ஊடாகப் பேசுவதற்கு இது நல்ல தருணம். இருதரப்புக்குமிடையில் சில விடயங்களிலேயே புரிந்துணர்வின்மையுள்ளது. அது நீக்கப்படுமானால்சமாதானத்தை இலகுவில்அடைய முடியும்.

இவ்வாறு அமைச்சர் தமேலும்ெரிவித்தார். (ஐ-7-21)

## மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்[

இதேவேளை—

புலிகளின்பகுதியில் இருந்து வரும் பயணிகளை எதிர்பார்த்து படையினர் நேற்று தமது நிலைகளில் காத்திருந்தனர்.

பயணிகளுக்கு பாஸ் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்துக்குத்தற்காலிக அரச அதிபராக நியமிக்கப்பட்டிருக்கும் உதவி அரச அதிபர் கே. சுந்தரமும், வாகன அணிக்குப் பொறுப்பான அதிகாரிகள் ஐந்து பேரும் நேற்று புலிகளின் பகுதியில் இருந்து வவுனியா வந்து சேர்ந்தனர். (ஐ-164)

## ஷெல்...

[முதலாம் பக்கத் தொடர்[

லில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலியான மீனவர் சாதிக் (வயது 27) என அடையாளம் காணப்பட்டார். காயமடைந்த அபுதாவுத் (வயது 38) என்பவர் புல்மோட்டை வைத்தியசாலையிலும், சுஹைர் (வயது 21) என்பவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். (ஐ-7-164)

## கைதான...

(முதலாம் பக்கத் தொடர்)

யப்பட்டவர்களாவர்.

இ. கஜலக்ஷ்மி (வயது — 21), இ. வளர்மதி (வயது 31)' சா. மாலினி (வயது 30), தெ. நிர்மலவேணி (வயது 27), பு. கவிதா (வயது 28) ஆகியோரே காங்கேசன்துறை தடை முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுக் கடந்த ஒரு வாரகாலமாக 512 ஆவது பிரிகேட்டில் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும்—

பின்னர் இவர்கள் கடந்த 13 ஆம் திகதி படையினரால் யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாகவும்—

பின்னர் யாழ். பொலீஸ் நிலையத்திலிருந்து இவர்கள் 5 பேரும் காங்கேசன்துறை தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும்—

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி எஸ், ஸ்ரீதரன் தெரிவித்தார். (ஐ-9)

## புல்மோட்டைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

தன் அல்லது அந்தமான் (வடிவேல் செந்தில்குமார் — மட்டக்களப்பு) ஆகிய இரு போராளிகளும் வீரச்சாவடைந்ததாகவும்—

'புலிகளின்குரல்' வானொலி தெரிவித்தது.

இதேவேளை—

புல்மோட்டைக் கடலில் நேற்று அதிகாலை இடம்பெற்ற சண்டையில் விடுதலைப் புலிகளின் இரு படகுகள் கடலில் வெடித்துச் சிதறி மூழ்கியதாகவும் —

அவற்றில் வெடி மருந்துகள் ஏற்றப்பட்டிருந்ததாகவும் —

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

அதிகாலை 3 மணி முதல் 6 மணி வரை சண்டை நீடித்ததாகக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழக்கில் கொக்கிளாய் கடற்பரப்பில் கடந்த வாரம் வியாழன் இரவு கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையே சுமார் நான்கு மணி நேரம் உக்கிரச் சமர் இடம் பெற்றது தெரிந்ததே. (ஐ-7-164-21)

## வீதிக்...

(முதலாம் பக்கத் தொடர்)

ணிப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுவந்தனர்.

மேற்படி வாகனத் தொடர்அணி இடம்பெறும் நாள்களில் விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதல்களை அடுத்தே இந்தப் புதிய பாதுகாப்பு நடைமுறை நேற்று முதல் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை—

மட்டக்களப்பு நகரிலிருந்து நேற்றும் இரண்டாவது நாளாக வாகனத் தொடர் அணி புதுப்பாலம் வழியாகவே நகரைக்கடந்து சென்றது.

இராணுவ வாகனத்தொடர் அணி நகரைவிட்டு வெளியேறும்போது நகரின் முக்கிய வீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு வாகனங்கள் முழுமையாக வெளியேறிய பின்னரே போக்குவரத்துக்கு அனுமதியளிக்கப்பட்டது. [ஐ-7-21]

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-08-99 இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org